5th November 1966]

வைத்திருப்பதாக தெரிகிறது. அதைப் போலவே இதையும் 1967 தேர்தலுக்குப் பின்னுல் பார்த்துக்கொள்ளலாம் என்ற நினைப்பில் —அரசியல் காரணமாக—தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நான் சொன்ன தகவல், ஜப்பானிய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாக சொன்னேன். யாரும் இதற்கு உதவி அளிக்க மாட்டார்கள் என் கின்ற நிலைமைக்கு இடமில்லை.

*Sago Units*

* 432 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have proposed to evolve any method for adoption by producers of Sago Units in Salem district to remove the foul smell emanating from the effluent discharges from the settlement tanks in the said units?

THE HON. SRI R. VENKATARAMAN: The Government are considering a proposal to set up a research unit for conducting pilot plant studies to evolve suitable methods for treating the effluent discharges.

**திரு. வை. சங்கரன்:** இது எப்போது முடிந்து, இதற்குள்ள முடிவு எடுக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: This is proposed to be taken as a Part II Scheme in 1967–68 budget.

**திரு. வை. சங்கரன்:** இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று உற்பத்தியாளர்களுக்கு எடுத்துக் கூறப்படுமா அல்லது அவர்கள் வற்புறுத்தப்படுவார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** முதலில் பைலட் பிராஜக் டாக செய்யப்படுகிறது. அதற்குப்பிறகுதான் இதெல்லாம் முடிவு செய்யப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், அக்கம்பக்கத்தில் இருக்கின்ற குடிதண்ணீர் கிணறுகள் எல்லாம் இதனுல் பாதிக்கப்படுகின்றன. இப்போது பைலட் ஸ்கீமாக வைத்திருந்தாலும், இதை துரிதமாக சேலம் மாவட்டத்தில் அமல் செய்து நீரை சுத்தம் செய்வதற்கு ஏதாவது திட்டம் உண்டா? அப்படியென்ருல் அதன் விவரம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இந்த முறையில் சுத்தம் செய்வதைப்பற்றி ஆலோசனைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதில் ஒரு முறை ஆக்சிடேஷன் பான்ட், என்று இருக்கிறது, இன்னுென்று 'பைலாஜிக்கல் ஃபில்டரேஷன் மெதட்' என்றிருக் கிறது. இதில் இப்போது பைலட் ஸ்கிம் ஒன்றை ஏற்படுத்திப் பார்த்து, அதில் உபயோககரமாக இருக்கிறதா என்பதைப் பார்த்து விட்டு பின்னுல் இருப்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இப்போது ஆலோசனையில் இருக்கிற பைலட் திட்டத்தினுடைய விவரங்கள் என்ன? இதற்கு என்ன செலவு ஆகும்? எந்த இடத்தில் முதலில் பரீட்சார்த்தமாக வைக்கப்படும்? என்று அறியலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** சேலத்தில் இப்போது இருக்கிற சவ்வரிசித் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் வைப்பதாக உத்தேசம். அதற்கு நான்-ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் 30,000 ரூபாய், ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் 40,000 ரூபாய் ஆகும்.

*Plants for milk products*

* 433 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up plants for the manufacture of milk products including Baby-food in the State in private or public sector; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) A scheme for the establishment of a factory for the manufacture of infant and invalid foods at Ootacamund has been under consideration of the Government and it is still in the initial stages.

A private party also has come forward with a proposal to establish a dairy-*cum*-factory for the manufacture of baby food, skim milk powder, cheese and butter at Gudalur taluk and his scheme is under examination.

**திரு. வை. சங்கரன்:** ஸார், சர்க்கார் துறையில் ஆரம்பிக்கப் படுவதாக இருந்தால் அதன் அளவு எவ்வளவாக இருக்கும்? உற்பத்தி எந்த அளவில் இருக்கும்? தனியார் துறையில் ஆரம்பிக் கப்படுவதாக இருந்தால் எந்த அளவாக இருக்கும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இதெல்லாம் 'இனிஷியல் ஸ்டேஜஸ்' என்று சொன்னேன்; முடிவு செய்யப்படவில்லை. காரணம் என்ன என்றால், 10,000 லிட்டர் பால் கிடைத்தால்தான் இந்தத் தொழிற்சாலை வைக்க முடியும்.

**திரு. வை. சங்கரன்:** இது ஆரம்பிக்கப்படுவதாக இருந்தால் எப்போது முடிவு எடுத்து ஆரம்பிக்கப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** முடிவு எடுப்பது ஒன்றும் இல்லை. 10,000 லிட்டர் பால் கிடைக்கும் வசதி ஏற்பட்டவுடன் இதை ஏற்படுத்தலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, 10,000 லிட்டர் பால் கிடைக்கும் இடத்தில் வைக்கப்படக் கூடும் என்று தெரிவித்தார்கள். இப்போது இருக்கும் நிலையில் எந்தப் பகுதி அதற்குச் சாதகமாக இருக்கும் என்று அறியலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஒரு நபர் கூடலூரில் வைக்க முடியும் என்று எழுதியிருக்கிறார். அது சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது.